TNTP160016212023

Presented on : 05-05-2023
Registered on : 05-05-2023
Decided on : 29-06-2026
Duration : 3 years, 1 months, 24 days

**குற்றவியல் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், இலால்குடி.**

முன்னிலை : திரு.சு.அருணாச்சலம், B.E, L.L.B.(Hons),
நீதித்துறை நடுவர்,
இலால்குடி.

2026-ம் ஆண்டு ஜூன் திங்கள் 29-ம் நாள் திங்கட்கிழமை

**ஆண்டுப்பட்டிகை வழக்கு எண்.53/2023**

**CNR.No. TNTP16-001621-2023**

| | | |
|---|---|---|
| குற்றமுறையிடுபவர் | : | அரசுக்காக: காவல் ஆய்வாளர்,<br>காவல் நிலையம், சிறுகனூர்,<br>குற்ற எண்.03/2020 |
| | | -எதிர்- |
| எதிரியின் பெயரும், விலாசமும் | : | சக்திவேல் த.பெ.அயினான் வயது 25/2020<br>தெற்கு வயலூர், மண்ணச்சநல்லூர் தாலுகா,<br>திருச்சி மாவட்டம். |
| எதிரியின் மீது சுமத்தப்பட்ட | | அதிவேகமாகவும், அஜாக்கிரதையாகவும் வாகனத்தை ஓட்டி வந்து, ஒருவருக்கு |

| | | |
|---|---|---|
| குற்றச்சாட்டுகள் | | மரணத்தை விளைவித்தல் – இதச பிரிவுகள் 279 மற்றும் 304(A) –ன் கீழ் தண்டிக்கத்தக்கது. |
| எதிரியின் பதிலுரைகள் | : | குற்றவாளி இல்லை |
| நீதித்துறை நடுவரின் தீர்ப்பு | : | எதிரியின் மீது இதச பிரிவுகள் 279 மற்றும் 304(A)ன் கீழ், சுமத்தப்பட்டுள்ள குற்றச்சாட்டுகளின்படி எதிரி குற்றவாளி இல்லை என முடிவு செய்து கு.வி.மு.ச.பிரிவு 255(1)ன் கீழ் எதிரியை விடுதலை செய்து இந்நீதிமன்றம் தீர்ப்பளிக்கிறது. |

இவ்வழக்கு 05.05.2023–ம் தேதியன்று இந்நீதிமன்ற கோப்புக்கு எடுக்கப்பட்டு அரசு தரப்பில் கற்றறிந்த குற்றத்துறை உதவி வழக்கறிஞர் நிலை I திருமதி.ஜெயந்தி, அவர்களும், எதிரி தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர்கள் திரு.S.அகிலன் மற்றும் திரு.D.செந்தில்குமார் ஆகியோர்கள் ஆஜராகியும் இருதரப்பு வாதங்களையும், இவ்வழக்கு ஆவணங்களையும் ஆய்வு செய்த பின்னர் இன்று இந்நீதிமன்றம் வழங்கும்.

## <u>தீர்ப்புரை</u>

**<u>அரசு தரப்பு வழக்கின் சுருக்கம்:–</u>**

1) அரசு தரப்பு வழக்கானது, வாதி மோகனம்பாள் என்பவரின் கணவரான கல்லுபுலி என்பவர் 03.01.2020ம் தேதி மதியம் 15.30 மணியளவில் அவருக்கு சொந்தமான TN 48 AD 4689 TVS XL வண்டியில்

அவரது தங்கை வீட்டிற்கு கரியமாணிக்கத்திற்கு சென்று வருவதாக வாதியிடம் சொல்லிவிட்டு சென்றவர் கண்ணியாக்குடி – தேவிமங்கலம் செல்லும் சாலையில் வடக்கிலிருந்து தெற்கு நோக்கி வந்த போது தேவிமங்கலம் கோவிந்தம் வயக்காடு அருகில் நின்றுக்கொண்டு அவரது உறவினர்களுடன் பேசிக்கொண்டிருந்த போது மதியம் 15.30 மணியளவில் மேற்படி சாலையில் தெற்கிலிருந்து வடக்கு நோக்கி வந்த TN 28 AB 5410 என்ற லாரியை அதன் ஓட்டுநர் சக்திவேல் என்பவர் அதிவேகமாகவும், அஜாக்கிரதையாகவும் ஆரன் அடிக்காமலும் ஓட்டி வந்து வாதியின் கணவர் மீது மோதியதில் பின் பக்க டயர் வாதியின் கணவரின் தலையில் ஏறி அவருக்கு இறப்பை ஏற்படுத்தியதாக, எதிரியின் மீது இதச பிரிவுகள் 279 மற்றும் 304(A)ன் கீழ், சிறுகனூர் காவல் ஆய்வாளர் குற்றப்பத்திரிக்கை தாக்கல் செய்துள்ளார்.

2) இவ்வழக்கானது ஆண்டுப்பட்டிகை வழக்கு எண்.53/2023 ஆக இந்நீதிமன்றத்தில் கோப்புக்கு எடுக்கப்பட்டு எதிரிக்கு அழைப்பாணை அனுப்பப்பட்டது. இவ்வழக்கின் எதிரி இந்நீதிமன்றத்தில் முன்னிலையானபோது, அரசு தரப்பில் தாக்கலான ஆவணங்களின் நகல்கள் யாவும் கு.வி.மு.ச. பிரிவு 207–ன் படி இலவசமாக வழங்கப்பட்டது. போதிய கால அவகாசம் வழங்கப்பட்டது. ஆவணங்களை பரிசீலனை செய்து பார்த்ததில், எதிரி குற்றம் புரிந்திருப்பதற்கான போதிய முகாந்திரம் இருந்ததால், எதிரியின் மீது இதச பிரிவுகள் 279 மற்றும் 304(A) ன் படி, குற்றச்சாட்டுகள் விளக்கிக்கூற எதிரி தன்னை குற்றவாளி அல்ல என்று கூறினார். எனவே அரசு தரப்பில் விசாரணைக்கு உத்தரவிடப்பட்டது.

3) எதிரி மீதான குற்றச்சாட்டை நிரூபிக்கும் பொருட்டு அரசு தரப்பில் அ.சா.1 முதல் அ.சா.3 வரையிலான சாட்சிகள் விசாரிக்கப்பட்டு, அ.சா.ஆ.1 முதல் அ.சா.ஆ.9 வரையிலான சான்றாவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளன.

**4) அரசு தரப்பு சாட்சிகளின் சாட்சியங்களிலிருந்து தெரியவரும் அரசு தரப்பு வழக்கின் சுருக்கம் பின்வருமாறு :—**

4.1) இவ்வழக்கில் புகார்தாரரான அ.சா.1 தனது சாட்சியத்தில், கடந்த 03.01.2020 ம் தேதி தனது கணவர் கரியமாணிக்கத்தில் உள்ள அவரது தங்கையை பார்ப்பதற்காக இருசக்கர வாகனத்தில் சென்றார் என்றும், திரும்ப வீட்டிற்கு வருவதற்காக கனியாகுடியிலிருந்து தேவி மங்களம் சாலையில் வடக்கிலிருந்து தெற்கு நோக்கி வந்தபோது தேவி மங்களம் கோவிந்தன் வயல்காடு அருகே தனது உறவினர் தர்மசிங்காரம் என்பவரை தனது கணவர் பார்த்ததால் அவர் தனது இருசக்கர வாகனத்தை நிறுத்திவிட்டு வண்டியில் உட்கார்ந்துகொண்டு அவரிடம் பேசிக்கொண்டு இருந்தபோது மதியம் 03.30 மணியளவில் தெற்கிலிருந்து வடக்கு நோக்கி வந்த லாரியானது அஜாக்கிரதையாகவும், ஹாரன் அடிக்காமலும் வந்து வண்டியுடன் நின்றுக்கொண்டு இருந்த தனது கணவர் மீது மோதி விபத்து நடைபெற்றது என்றும், தலையில் அடிப்பட்டு தனது கணவர் சம்பவ இடத்திலேயே இறந்துவிட்டதாக தர்மசிங்காரம் தனக்கு போன் மூலமாக தகவல் சொன்னார் என்றும், சம்பவம் நடைபெறும்போது தான் வீட்டில் இருந்தேன் என்றும், சம்பவம் கேள்விப்பட்டு சம்பவம் இடம் சென்று பார்த்தபோது தனது கணவர் தலையில் காயம் ஏற்பட்டு இறந்துகிடந்தார் என்றும், 108 ஆம்புலன்ஸ் மூலமாக தனது கணவரை ஸ்ரீரங்கம் அரசு

மருத்துவமனைக்கு கொண்டு சென்றோம் என்றும், அதன்பிறகு சிறுகனூர் காவல் நிலையம் சென்று மேற்படி வழக்கு சம்பவம் தொடர்பாக நடவடிக்கை எடுக்க கோரி புகார் மனு கொடுத்தேன் என்றும், தன்னிடம் காட்டப்படும் புகார் மனுவில் உள்ள கையொப்பம் தன்னுடையதுதான் என்றும், சம்பவ சமயத்தில் விபத்து ஏற்படுத்திய லாரியை வளையூரை சேர்ந்த சக்திவேல் என்பவர் ஓட்டிவந்ததாக கேள்விபட்டேன் என்றும், விபத்து ஏற்படுத்திய லாரியின் பதிவு எண். TN–28 AB–5410 என்றும், பிரேத விசாரணையின் போது தான் உடனிருந்தேன் என்றும் சாட்சியமளித்துள்ளார்.

4.2) அ.சா.2 தனது சாட்சியத்தில், ஜனவரி மாதம் 2020ம் வருடம் தேதி தற்போது ஞாபகம் இல்லை என்றும், கல்லுபுலி அவரது தங்கையை பார்ப்பதற்காக கரியமாணிக்கத்திற்கு XL வாகனத்தில் சென்றிருந்தார் என்றும், திரும்ப ஊருக்கு வருவதற்காக கன்னியாகுடியிலிருந்து தேவிமங்களம் நோக்கி வடக்கிலிருந்து தெற்கு நோக்கி தேவி மங்களத்தில் உள்ள கொய்யா காடு அருகே வந்தபோது தர்ம சிங்காரம் நின்றுக்கொண்டு இருந்ததால் மதியம் 3 மணியளவில் கல்லுபுலி வண்டியை நிறுத்திவிட்டு இருசக்கர வாகனத்தில் உட்கார்ந்துக்கொண்டு தர்ம சிங்காரத்திடம் பேசிக்கொண்டு இருந்தபோது தெற்கிலிருந்து வடக்கு நோக்கி வந்த லாரியானது கல்லுபுலி மீது மோதி விபத்து நடைபெற்றது என்றும், விபத்து நடந்தபோது சம்பவ இடத்தில் அருகில் ஆடு மேய்த்துக்கொண்டு இருந்தேன் என்றும், சம்பவ இடத்தில் அருகில் இருந்தவர்கள் ஓடி செல்வதை பார்த்து தானும் சம்பவம் இடம் சென்று பார்த்தபோது தலையில் காயம் ஏற்பட்டு சம்பவ இடத்திலேயே இறந்திருந்தார் என்றும், தன்னிடம்

காட்டப்படும் பார்வை மகஜரில் உள்ள 1வது கையொப்பம் என்னுடையதுதான் என்றும், சுமார் 10 வருடங்களுக்கு முன்பு தேதி மாதம் தற்போது ஞாபகம் இல்லை என்றும், மதியம் 11 மணியளவில் தானும் செல்வம் என்பவரும் சம்பவ இடத்திற்கு அருகே ஆடு மேய்த்துக்கொண்டு இருந்தோம் என்றும், அப்போது சம்பவ இடத்தை போலீசார் பார்வையிட்டு படம் வரைந்து எழுதிக்கொண்டார் என்றும், அந்த பார்வை மகஜரில் நானும் செல்வம் என்பவரும் சாட்சி கையொப்பம் செய்தோம் என்றும் சாட்சியமளித்துள்ளார்.

4.3) அ.சா.3 தனது சாட்சியத்தில், கடந்த 03.01.2020-ம் தேதி சிறுகனூர் காவல் நிலைய உதவி ஆய்வாளராக முத்துசாமி என்பவர் நிலைய பொறுப்பில் இருந்த போது மோகனாம்பாள் என்பவர் நிலையம் ஆஜராகி கொடுத்த புகாரை பெற்று வழக்கு பதிவு செய்து, முதல் தகவல் அறிக்கை தயார் செய்து, பதிவு செய்யப்பட்ட வழக்கு கோப்பினை விசாரணைக்காக காவல் ஆய்வாளர் பார்வைக்கு வைத்துள்ளார் என்றும், காவல் ஆய்வாளர் வழக்கினை விசாரணைக்கு எடுத்துக்கொண்டு 04.01.2020 காலை 06.00 மணியளவில் சம்பவ இடம் சென்று சாட்சிகள் முன்னிலையில் சம்பவ இடத்தை பார்வையிட்டு, மாதிரி வரைபடம் மற்றும் பார்வை மகஜர் தயார் செய்துள்ளார் என்றும், பார்வை மகஜர் சாட்சிகளை தனித்தனியாக விசாரணை செய்து வாக்குமூலம் பதிவு செய்து சாட்சிகளிடம் கையொப்பம் பெற்றுள்ளார் என்றும், கடந்த 04.01.2020ம் காலை 7 மணியளவில் ஸ்ரீரங்கம் அரசு மருத்துவமனையில் உள்ள பிரேதகிடங்கில் இருந்த கல்லுபுலி என்பவர் பிரேதத்தின் மீது பஞ்சாயத்தார் சாட்சிகள் முன்னிலையில் பிரேத விசாரணை மேற்கொண்டுள்ளார்

என்றும், பின்னிட்டு இவ்வழக்கில் இறந்துபோன பிரேதத்தினை பிரேத பரிசோதனைக்காக மணிகண்டன் இரண்டாம் நிலை காவலர் மூலம் வேண்டுகோள் கடிதம் அனுப்பி வைத்துள்ளார் என்றும், பின்பு பட்டியல் சாட்சிகளான 1 முதல் 7 வரை தனித்தனியாக விசாரணை செய்து, வாக்குமூலம் பதிவு செய்துள்ளார் என்றும், சாட்சிகளின் விசாரணையிலிருந்து சம்பவம் உண்மை என தெரிந்து எதிரியை தேடி வந்த நிலையில் இவ்வழக்கின் எதிரியானவர் மாண்புமிகு குற்றவியல் நீதிமன்றத்தில் சரண் அடைந்து பிணையில் சென்றதால் அவரை கைது செய்யவில்லை என்றும், இவ்வழக்கில் விபத்தில் சம்பந்தப்பட்ட வாகனங்களை மோட்டார் வாகன ஆய்வாளர் கார்த்திகேயன் என்பவருக்கு அனுப்பி வைத்து வாக்குமூலம் பதிவு செய்து தணிக்கை சான்று பெற்றுள்ளார் என்றும், இவ்வழக்கில் இறந்துபோன கல்லுபுலி என்பவரின் பிரேதத்தின் மீது பிரேத பரிசோதனை மேற்கொண்ட மருத்துவர் வைஷ்ணவி என்பவரை விசாரணை செய்து வாக்குமூலம் பதிவு செய்து பிரேத பரிசோதனை அறிக்கை பெற்றுள்ளார் என்றும், இவ்வழக்கில் பட்டியல் சாட்சியான 12 யை விசாரணை செய்து வாக்குமூலம் பதிவு செய்துள்ளார் என்றும், அவருடைய வழக்கு விசாரணையை முடித்து எதிரி மீதான குற்றத்திற்கு போதிய ஆதாரம் இருந்ததால் எதிரி மீது இதச பிரிவுகள் 279, 304(A)ன் கீழ் குற்ற இறுதி அறிக்கை தயார் செய்து தாக்கல் செய்துள்ளார் என்று இவ்வழக்கினை பதிவு செய்த உதவி ஆய்வாளர் முத்துசாமி மற்றும் புலன் விசாரணை அதிகாரியான காவல் ஆய்வாளர் மணிவண்ணன் ஆகியோர்களுக்கு பதிலாக

சாட்சியமளித்துள்ளார். இத்துடன் அரசு தரப்பு சாட்சியங்கள் முடிக்கப்பட்டது.

5) அரசு தரப்பு சாட்சியத்தில் எதிரிக்கு பாதகமாக தோன்றியவற்றை குறித்து எதிரியிடம் கு.வி.மு.ச பிரிவு 313(1) (ஆ)ன்படி வினவியபோது அவற்றை பொய் எனக்கூறி மறுத்தார். எதிரி தரப்பில் சாட்சிகள் யாரும் விசாரிக்கப்படவில்லை.

6) இவ்வழக்கில் தீர்மானிக்கப்படவேண்டியது யாதெனில் எதிரி மீதான இதச பிரிவுகள் 279, 304(A)ன் கீழான குற்றச்சாட்டுகள் அரசு தரப்பில் சந்தேகத்திற்கு இடமின்றி நிரூபிக்கப்பட்டுள்ளதா? என்பதுதான்.

**<u>தீர்வு:–</u>**

7) அரசு தரப்பில் வாதிட்ட கற்றறிந்த வழக்கறிஞர் தனது வாதத்தில், அ.சா.1 மற்றும் அ.சா.3 வரையிலான சாட்சியங்கள் மற்றும் அ.சா.ஆ.1 முதல் அ.சா.ஆ.9 சான்றாவணங்களின் அடிப்படையில், எதிரி மீதான குற்றச்சாட்டுகள் நிரூபிக்கப்பட்டுள்ளது என்றும், எனவே எதிரிக்கு தகுந்த தண்டனை வழங்கப்பட வேண்டுமென்றும் வாதிட்டார். மாறாக எதிரி தரப்பில் வாதிட்ட கற்றறிந்த வழக்கறிஞர் தனது வாதத்தில், அ.சா.1 முதல் அ.சா.3 வரையிலான சாட்சிகள் முன்னுக்கு பின் முரணாக சாட்சியமளித்துள்ளதால், சந்தேகத்தின் பலனை எதிரிக்கு அளித்து, எதிரியை விடுதலை செய்ய வேண்டுமென்று வாதிட்டார்.

8) அரசு தரப்பு, சாட்சியங்களையும், சான்றாவணங்களையும் பரிசீலனை செய்ததில், அரசு தரப்பு வழக்கை நிரூபிக்க மிக முக்கிய சாட்சியாக கருதப்படுபவர் தர்மசிங்காரம் என்பவர் ஆவார். தர்மசிங்காரம்

இவ்வழக்கில் கண்ணுற்ற சாட்சியாவார். ஆனால் தர்மசிங்காரம் கடந்த 10.08.2021ம் தேதியன்று இறந்துவிட்டார்.

9) அ.சா.1 தனது சாட்சியத்தில், விபத்து சம்பவம் குறித்து தனக்கு போன் மூலம் தகவல் கிடைத்ததை பற்றி சாட்சியமளித்துள்ளார்.

10) அ.சா.3 தனது சாட்சியத்தில், பார்வை மகஜரில் கையொப்பம் செய்ததை பற்றி சாட்சியமளித்துள்ளார்.

11) அ.சா.3 தனது சாட்சியத்தில், கடந்த 03.01.2020-ம் தேதி சிறுகனூர் காவல் நிலைய உதவி ஆய்வாளராக முத்துசாமி என்பவர் நிலைய பொறுப்பில் இருந்த போது மோகனாம்பாள் என்பவர் நிலையம் ஆஜராகி கொடுத்த புகாரை பெற்று வழக்கு பதிவு செய்து, முதல் தகவல் அறிக்கை தயார் செய்து, பதிவு செய்யப்பட்ட வழக்கு கோப்பினை விசாரணைக்காக காவல் ஆய்வாளர் பார்வைக்கு வைத்துள்ளார் என்றும், காவல் ஆய்வாளர் வழக்கினை விசாரணைக்கு எடுத்துக்கொண்டு 04.01.2020 காலை 06.00 மணியளவில் சம்பவ இடம் சென்று சாட்சிகள் முன்னிலையில் சம்பவ இடத்தை பார்வையிட்டு, மாதிரி வரைபடம் மற்றும் பார்வை மகஜர் தயார் செய்துள்ளார் என்றும், பார்வை மகஜர் சாட்சிகளை தனித்தனியாக விசாரணை செய்து வாக்குமூலம் பதிவு செய்து சாட்சிகளிடம் கையொப்பம் பெற்றுள்ளார் என்றும், கடந்த 04.01.2020ம் காலை 7 மணியளவில் ஸ்ரீரங்கம் அரசு மருத்துவமனையில் உள்ள பிரேதகிடங்கில் இருந்த கல்லுபுலி என்பவர் பிரேதத்தின் மீது பஞ்சாயத்தார் சாட்சிகள் முன்னிலையில் பிரேத விசாரணை மேற்கொண்டுள்ளார் என்றும், பின்னிட்டு இவ்வழக்கில் இறந்துபோன பிரேதத்தினை பிரேத பரிசோதனைக்காக மணிகண்டன் இரண்டாம் நிலை காவலர் மூலம்

வேண்டுகோள் கடிதம் அனுப்பி வைத்துள்ளார் என்றும், பின்பு பட்டியல் சாட்சிகளான 1 முதல் 7 வரை தனித்தனியாக விசாரணை செய்து, வாக்குமூலம் பதிவு செய்துள்ளார் என்றும், சாட்சிகளின் விசாரணையிலிருந்து சம்பவம் உண்மை என தெரிந்து எதிரியை தேடி வந்த நிலையில் இவ்வழக்கின் எதிரியானவர் மாண்புமிகு குற்றவியல் நீதிமன்றத்தில் சரண் அடைந்து பிணையில் சென்றதால் அவரை கைது செய்யவில்லை என்றும், இவ்வழக்கில் விபத்தில் சம்பந்தப்பட்ட வாகனங்களை மோட்டார் வாகன ஆய்வாளர் கார்த்திகேயன் என்பவருக்கு அனுப்பி வைத்து வாக்குமூலம் பதிவு செய்து தணிக்கை சான்று பெற்றுள்ளார் என்றும், இவ்வழக்கில் இறந்துபோன கல்லுபுலி என்பவரின் பிரேதத்தின் மீது பிரேத பரிசோதனை மேற்கொண்ட மருத்துவர் வைஷ்ணவி என்பவரை விசாரணை செய்து வாக்குமூலம் பதிவு செய்து பிரேத பரிசோதனை அறிக்கை பெற்றுள்ளார் என்றும், இவ்வழக்கில் பட்டியல் சாட்சியான 12 யை விசாரணை செய்து வாக்குமூலம் பதிவு செய்துள்ளார் என்றும், அவருடைய வழக்கு விசாரணையை முடித்து எதிரி மீதான குற்றத்திற்கு போதிய ஆதாரம் இருந்ததால் எதிரி மீது இதச பிரிவுகள் 279, 304(A)ன் கீழ் குற்ற இறுதி அறிக்கை தயார் செய்து தாக்கல் செய்துள்ளார் என்று இவ்வழக்கினை பதிவு செய்த உதவி ஆய்வாளர் முத்துசாமி மற்றும் புலன் விசாரணை அதிகாரியான காவல் ஆய்வாளர் மணிவண்ணன் ஆகியோர்களுக்கு பதிலாக சாட்சியமளித்துள்ளார்.

12) இந்த வழக்கில் அ.சா.1 மற்றும் அ.சா.2 கேள்விப்பட்ட சாட்சிகள் ஆவார்கள். கேள்விப்பட்ட சாட்சிகளின் சாட்சியமானது இந்திய சாட்சிய

சட்டத்தின் படி ஏற்றுக்கொள்ளத்தக்கதல்ல. இவ்வழக்கில் சாட்சியங்கள் மற்றும் சான்றாவணங்களின் அடிப்படையில் எதிரிதான் லாரியை அஜாக்கிரதையாகவோ அல்லது கவனக்குறைவாகவோ ஓட்டி வந்து கல்லுபுலி என்பவரின் இருசக்கர வாகனத்தின் மீது மோதி இறப்பை ஏற்படுத்தினார் என்பது அரசு தரப்பால் நிரூபிக்கப்படவில்லை என இந்நீதிமன்றம் கருதுகிறது.

13) இந்த வழக்கை பொறுத்தவரையில், எதிரிதான் விபத்தை ஏற்படுத்தியதாக சொல்லப்படும் லாரியை ஓட்டி வந்தார் என எந்த ஒரு சாட்சியும் எதிரியை அடையாளப்படுத்தி சாட்சியமளிக்கவில்லை. எதிரியின் அஜாக்கிரதை அல்லது கவனக்குறைவுதான் விபத்திற்கு காரணம் என்பது அரசு தரப்பு சாட்சிகளின் மூலம் நிரூபிக்கப்படவில்லை என இந்நீதிமன்றம் கருதுகிறது.

14) எனவே, எதிரிதான் லாரியை அதிவேகமாகவும், கவனக்குறைவாகவும் ஓட்டி வந்து வண்டியுடன் நின்றுக்கொண்டிருந்த வாதியின் கணவரான கல்லுபுலி என்பவர் மீது மோதி அவருக்கு இறப்பை ஏற்படுத்தினார் என்பது அரசு தரப்பால் சந்தேகத்திற்கு இடமின்றி நிரூபிக்கப்படவில்லை என இந்நீதிமன்றம் கருதுகிறது.

15) ஆகவே, அரசு தரப்பில் எதிரி மீது சுமத்தப்பட்டுள்ள குற்றச்சாட்டுகளை சந்தேகத்திற்கு அப்பாற்பட்டு நிரூபணம் செய்யவில்லை என முடிவு செய்து, எதிரி குற்றவாளி அல்ல என இந்நீதிமன்றம் தீர்மானிக்கிறது.

**16) இறுதியாக,**

எதிரியின் மீது இதச பிரிவுகள் 279, 304(A)ன் கீழ், சுமத்தப்பட்டுள்ள குற்றச்சாட்டுகளின்படி எதிரி குற்றவாளி இல்லை என முடிவு செய்து குவிமுச பிரிவு 255(1)ன் கீழ் எதிரியை விடுதலை செய்து இந்நீதிமன்றம் தீர்ப்பளிக்கிறது.

17) இந்த வழக்கில் மேல்முறையீட்டுக் காலத்திற்கு பிறகு எதிரியால் எழுதிக் கொடுக்கப்பட்ட பிணையப்பத்திரத்தை ரத்து செய்ய உத்தரவிடப்படுகிறது.

இந்த தீர்ப்புரை என்னால் சுருக்கெழுத்து தட்டச்சருக்கு நேரடியாக சொல்லப்பட்டு, அவரால் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, பின்னர் என்னால் பிழைதிருத்தம் செய்யப்பட்டு இன்று 2026–ம் ஆண்டு ஜூன் திங்கள் 29–ம் நாள் என்னால் அவையறிய பகரப்பட்டது.

ARUNACHALAM Digitally signed by ARUNACHALAM Date: 2026.06.29 15:00:53 +0530

நீதித்துறை நடுவர்
இலால்குடி.

**அரசு தரப்பு சாட்சிகள்:–**

| | |
|---|---|
| அ.சா.1 | மோகனம்பாள் |
| அ.சா.2 | தினேஷ்குமார் |
| அ.சா.3 | முத்துசாமி |

**அரசு தரப்பு சான்றாவணங்கள்:–**

## Judicial Form No.68

| Sl.No of the exhibit | Description of the exhibit and its date | Date,When the exhibit was filed in the case | How marked | By Whom marked | Remarks |
|---|---|---|---|---|---|
| 1. | புகார் மனு | 11.06.26 | அ.சா.ஆ.1 | அ.சா.1 | அசல் |
| 2.. | பார்வை மகஜரில் அ.சா.2 ன் கையொப்பம் | 11.06.26 | அ.சா.ஆ.2 | அ.சா.2 | அசல் |
| 3. | பார்வை மகஜர் | 11.06.26 | அ.சா.ஆ.3 | அ.சா.2 | அசல் |
| 4. | முதல் தகவல் அறிக்கை | 29.06.26 | அ.சா.ஆ.5 | அ.சா.3 | அசல் |
| 5. | மாதிரி வரைபடம் | 29.06.26 | அ.சா.ஆ.6 | அ.சா.3 | அசல் |
| 6. | பிரேத விசாரணை அறிக்கை | 29.06.26 | அ.சா.ஆ.7 | அ.சா.3 | அசல் |
| 7. | TN 28 AV 5410 என்ற வாகனத்தின் வாகன தணிக்கை சான்று | 29.06.26 | அ.சா.ஆ.8 | அ.சா.3 | அசல் |
| 8. | TN 48 AD 4689 என்ற வாகனத்தின் வாகன தணிக்கை சான்று | 29.06.26 | அ.சா.ஆ.8 | அ.சா.3 | அசல் |
| 9. | பிரேத பரிசோதனை அறிக்கை | 29.06.26 | அ.சா.ஆ.9 | அ.சா.3 | அசல் |

**சான்று பொருட்கள்:–**

இல்லை

**<u>எதிரி தரப்பில் சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள் :–</u>**இல்லை

ARUNACHALAM Digitally signed by ARUNACHALAM Date: 2026.06.29 15:00:45 +0530

நீதித்துறை நடுவர்
இலால்குடி.

**<u>குறிப்பு:–</u>**

1. வழக்கின் முடிவு காவல்நிலையத்திற்கு தெரிவிக்கப்பட்டது.
2. வழக்கு விசாரணையின்போது எதிரி பிணையில் இருந்தார்.
3. எந்தவொரு சாட்சியும் மூன்று வாய்தாக்களுக்கு மேல் விசாரிக்காமல் நிறுத்தி வைக்கப்படவில்லை.
4. இவ்வழக்கின் எதிரி குற்றவாளி இல்லை என்று குவிமுச பிரிவு 255(1)ன்–ன் கீழ் விடுதலை செய்து தீர்ப்பு வழங்கப்பட்டது.

ARUNACHALAM Digitally signed by ARUNACHALAM Date: 2026.06.29 15:00:48 +0530

/உண்மை நகல்/

நீதித்துறை நடுவர்
இலால்குடி.